# Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam



With the Blessings of His Holiness, Srimath Andavan
Sri Ranga Ramanuja Maha Desikan
of Srirangam Srimath Andavan Asramam

Recitation Material for Paduka Thiruvaradhanam

**SAttrumurai**

Website: www.ramanujamission.org

## சாற்றுமறை

சிற்றம் சிறு காலே வந்து உன்னை சேவித்து* உன்-
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்*
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து *நீ-
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது*
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா*
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் *உன் தன்னோடு-
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்

வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை*
திங்கள் திருமுகத்து சேய் இழையார் சென்று இறைஞ்சி*
அங்கப் பறை கொண்ட ஆற்றை* அணி புதுவைப்-
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன*
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே*
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத்தோள்*
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்*
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

பயனன்று ஆகிலும்* பாங்கலர் ஆகிலும்*
செயல் நன்றாகத் *திருத்திப் பணிகொள்வான்,*
குயில் நின்றார் பொழில் சூழ் *குருகூர் நம்பி,*
முயல்கின்றேன் *உன்தன் மொய்கழற்கு அன்பையே. (2) (10)

அன்பன் தன்னை* அடைந்தவர்க்கட்கு எல்லாம்-
அன்பன்,* தென்குருகூர் *நகர் நம்பிக்கு,*
அன்பனாய்* மதுரகவி சொன்னசொல்-
நம்பு வார்பதி,* வைகுந்தம் *காண்மினே. (2) (11)

[ கண்ணி நுண் சிறுத் தாம்பினால் *கட்டுண்ணப்-
பண்ணிய பெரு மாயன்,*என்னப்பனில்,*
நண்ணித் தென்குருகூர்* நம்பி என்றக்கால்,*
அண்ணிக்கும் அமுதூறும்* என் நாவுக்கே. ]

சூழ்ந்த கன்றாழ்ந்துயர்ந்த* முடிவில் பெரும் பாழேயோ*
சூழ்ந்ததனில் பெரிய* பரநன் மலர்ச்சோதீயோ*
சூழ்ந்ததனில் பெரிய* சுடர்ஞான இன்பமேயோ!*
சூழ்ந்ததனில் பெரிய* என் அவாவறச் சூழ்ந்தாயே! (2) 10.10.10.

அவாவறச் சூழ்* அரியை அயனை அரனை அலற்றி*
அவாவற்று வீடுபெற்ற* குருகூர்ச் சடகோபன் சொன்ன*
அவாவில் அந்தாதிகளால்* இவையாயிரமும்* முடிந்த-
அவாவில் அந்தாதி இப்பத்து அறிந்தார்* பிறந்தார் உயர்ந்தே. (2) 10.10.11



Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

அகல கில்லேன் இறையும் என்று*அலர்மேல் மங்கை உறைமார்பா,*
நிகரில் புகழாய்! உலகமூன்று உடையாய்!* என்னை ஆள்வானே,*
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்* திருவேங்கடத்தானே*
புகல் ஒன்றில்லா அடியேன்* உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே. 6.10.10

அடிக்கீழ் அமர்ந்து புகுந்து* அடியீர்! வாழ்மின்' என்றென்றருள் கொடுக்கும்*
படிக்கேழ் இல்லாப் பெருமானைப்* பழனக் குருகூர்ச் சடகோபன்,*
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்* திருவேங்கடத்துக்கு இவைபத்தும்,*
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து* பெரிய வானுள் நிலாவுவரே. 6.10.11

** இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலையென்னும்-
பொருப்பிடம், / மாயனுக்கென்பர்நல்லோர் *// அவை தம்மொடும்வந்து-
இருப்பிடம்மாயன்இராமானுசன்மனத்து, / இன்றுஅவன்வந்து-
இருப்பிடம் * என்தனிதயத்துள்ளே தனக்கின்புறவே. (2) 106

** இன்புற்ற சீலத்தி இராமானுச! * என்றும்எவ்விடத்தும்-
என்புற்றநோய், / உடல்தோறும்பிறந்துஇறந்து *// எண்ணரிய-
துன்புற்றுவீயினும் சொல்லுவதொன்றுண்டு, / உன்தொண்டர்கட்கே-
அன்புற்றிருக்கும்படி * என்னையாக்கி அங்காட்படுத்தே. (2) 107

** அங்கயல்பாய் வயல்தென்னரங்கன் * அணியாகமன்னும்-
பங்கயமாமலர்ப், / பாவையைப்போற்றுதும் *// பத்தியெல்லாம்-
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சே! நம்தலைமிசையே/
பொங்கியகீர்த்தி * இராமானுசனடிப்பூமன்னவே. (2) 108

[ பூமன்னுமாது பொருந்தியமார்பன் * புகழ்மலிந்த-
பாமன்னுமாறன்,/ அடிபணிந்துய்ந்தவன் *// பல்கலையோர்-
தாம்மன்னவந்தஇராமானுசன்,/ சரணாரவிந்தம்-
நாம்மன்னிவாழ * நெஞ்சே!சொல்லுவோம் அவன் நாமங்களே.]

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*
பலகோடி நூறாயிரம்*
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!* உன்-
சேவடி செவ்வி திருக்காப்பு. (2)

அடியோமோடும்நின்னோடும்* பிரிவின்றிஆயிரம்பல்லாண்டு*
வடிவாய் நின்வல மார்பினில் *வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும்* சுடராழியும் பல்லாண்டு*
படைபோர் புக்கு முழங்கும்* அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே.



Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

திருமகளும் திருவடிவும் * திருவருளும் தெள்ளறிவும் *
அருமையிலாமையும் உறவும் * அளப்பரிய வடிவரசுங் *
கருமமழிப்பளிப்பமைப்பும் * கலக்கமிலா வகைநின்ற *
அருள் வரதர் நிலையிலக்கில் * அம்பென நான் அமிழ்ந்தேனே. (2)

ஆறுபயன் வேறில்லா * அடியவர்கள் அனைவர்க்கும் *
ஆறுமதன் பயனுமிவை * ஒருகாலும் பலகாலும் *
ஆறுபயன் எனவேகண்டு * அருளாளர் அடியிணைமேல் *
கூறியநற் குணவுரைகள் * இவைபத்தும் கோதிலவே. (2)

வையக மெண் பொய்கை பூதம் பேயாழ்வார் /
மழிசையர்க்கோன் மகிழ்மாறன் மதுர கவி /
பொய்யில்புகழ்க் கோழியர்க்கோன் விட்டு சித்தன் /
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணுழ்வார் *
ஐயனருட் கலியன் எதிராசர் தம்மோடு /
ஆறிருவர் ஓரொருவர் அவர் தாஞ்செய்த /
துய்யதமிழ் இருபத்து நான்கிற் பாட்டின் –
தொகை / நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே. (2)

அந்தமிலா ஆரணங்கள் நாலாகி நின்ற /
அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்துச் /
செந்தமிழால் அருள் செய்த வகை தொகையும் /
சிந்தாமல் உலகங்கள் வாழ வென்று *
சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் /
வேதாந்த குருமொழிந்த ப்ரபந்தசாரம் /
சிந்தையினுல் அனுதினமுஞ் சிந்திப்போர்க்குச் /
சேமமதாங் திருமால்தன் கருணை யாலே. (2)

தொண்டருகக்குந் துணையடி வாழி / நின் தூமுறுவல் –
கொண்ட முகம்வாழி / வாழி வியாக்கியா முத்திரைக்கை *
வண்திரு நாமமும் வாழி / மணிவட முப்புரிநூல் –
கொண்டசீர்த் தூப்புல் குலமணியே / வாழி நின்வடிவே. (2)

வடிவழ கார்ந்த / வண் தூப்புல் வள்ளல் மென் மலரடிமேல் /
அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன் *
திடமுடன் ஈதைத் தினந்தொறும் ஆதரித்து ஓதுமன்பர் /
முடியிடை நேர்படும் / தூப்புலம்மான் பத மாமலரே. (2)

ஸ்வாமி வேதாந்த தேசிகன் **வாழிதிருநாமம்**

ஸர்வ தேஸ தஸாகாலேஷ்வவ்யாஹத பராக்ரமா
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்.
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவா ஸரமுஜ்ஜ்வலா



Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ.
ஸ்ரீமந்ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய
ஸ்ரீமந்ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய.
நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார்த்த ப்ரதாயிநே
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே.
ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்.
வாழி யிராமானுசப் பிள்ளான் மாதகவால்
வாழு மணிநிக மாந்தகுரு - வாழியவன்
மாறன் மறையுமிரா மானுசன் பாடியமும்
தேறும் படியுரைக்குஞ் சீர் .
வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே,
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே,
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே,
கலியனுரைகுடிகொண்டகருத்துடையோன் வாழியே,
செஞ்சொற்றமிழ்மறைகள்தெளிந்துரைப்போன் வாழியே,
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன் வாழியே,
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே,
தண்டமிழ்த்தூப்புல் திருவேங் கடவன்றான் வாழியே.
நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ
மாநகரின் மாறன் மறைவாழ--ஞானியர்கள்
சென்னியணி சேர்தூப்புல் வேதாந்த தேசிகனே!
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

வாழியணி தூப்புல் வரும்நிகமாந் தாசிரியன்,
வாழியவன் பாதார விந்தமலர் - வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்.

**ஸ்ரீ மணவாள மாமுனிகள் வாழிதிருநாமம்**
**( For ThennAchArya paramparA)**

**நம: ஸ்ரீசைலநாதாய குந்தீநகர ஜந்மநே |**
**ப்ரஸாத லப்த பரம ப்ராப்ய கைங்கர்ய சாலிநே ||**

**ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |**
**யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம் ||**

**வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்**
**வாழும், மணவாள மாமுனிவன் வாழியவன்,**
**மாறன் திருவாய்மொழிப்பொருளை மாநிலத்தோர்**
**தேறும்படி உரைக்கும் சீர்.**

**செய்யதாமரைத் தாளிணை வாழியே,**
**சேலைவாழி திருநாபி வாழியே,**
**துய்யமார்பும் புரிநூலும் வாழியே,**
**சுந்தரத் திருத்தோளிணை வாழியே,**
**கையுமேந்திய முக்கோலும் வாழியே,**
**கருணைபொங்கிய கண்ணிணை வாழியே,**
**பொய்யிலாத மணவாள முனி**



Sri Ramanuja Mission of Srirangam Srimath Andavan Asramam
Website: www.ramanujamission.org

**புந்திவாழி புகழ்வாழி வாழியே.**

**அடியார்கள் வாழ, அரங்கநகர் வாழ,**
**சடகோபன் தண்தமிழ்நூல் வாழ, கடல் சூழ்ந்த**
**மன்னுலகம் வாழ, மணவாள மாமுனியே!**
**இன்னுமொரு நூற்றாண்டிரும்.**

(ஸ்ரீமத் பெரியாண்டவன் **வாழிதிருநாமம்**)

நமஸ் தஸ்மை ஸ்ரீநிவாஸ லக்ஷ்மணுஹ்வய யோகிநே
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜாத்த ஸார்வஜ்ஞ்ய சாலிநே.
தேசிகேந்த்ர தயாபாத்ரம் தாஸவாத்ஸல்ய சேவதிம்
யதீந்த்ரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிக மாச்ரயே.

வாழி திருவரங்க மாநகர்சீர் மாதகவால்
வாழி சீனிவாசமுனி மாணடிகள்–வாழியவே
வேதமொரு நான்கும் வியன் தமிழின் மாமறையும்
தீதற நங்கட் கருளும் சீர்.
வேதப் பகைச் சமயம் வேர்களைவோன் வாழியே,
வேதாந்த தேசிகர்போல் வீற வந்தோன் வாழியே,
நீதிநெறி தவறாமல் நிறுத்தினேன் வாழியே,
நேசமுடனுசாரம் நீளவைத்தோன் வாழியே,
காதலுடன் தமிழ்மறையின் கருத்துரைப்போன் வாழியே,
கருது தொண்டர் குழாத்தை நன்கு காத்தளிப்போன் வாழியே,
பூதபுரீசனை மனத்துட் பொருந்த வைப்போன் வாழியே,
புகழ் சீனிவாசகுரு பூதலத்தில் வாழியே.

வேதயுகந் தான்வாழ வேதியர்கள் தாம்வாழ
ஏதமி லிராமானுசன்வாழ – மாதவனுர்
மன்னியகோயில் சீனிவாசனெனும் மாமுனியே
இன்னமொரு நூற்றாண்டிரும் .